படுகிறதா? நகர்ப்புறத்திற்கு அதிகமான அக்கறை காட்டப்படுகிறதா? இதன் காரணமாகத்தான் அந்த வித்தியாசம் வருகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கிறபோது சொல்லியிருக்கிறேன். அதைப் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம். எங்கெங்கே விவசாயத்தை நம்பி வாழ்கிறார்களோ அந்தப் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் அதிகமாகவும், விவசாயம் அல்லாமல் மற்றத் துறைகளில், தொழிற்சாலைகளில், அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் இருக்கும் பகுதிகளில் வறுமைக்கோடு என்பது கொஞ்சம் குறைவாக இருக்கிறது என்று நான் முதல் தெரிவித்து இருக்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பட்டியலை வருவாய்த் துறை அலுவலர்கள் கணக்கு எடுக்கிறார்களா அல்லது வேறு துறையைச் சேர்ந்தவர்கள் கணக்கு எடுக்கிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் தேசீய மாதிரிக் கணக்கு எடுப்புத் துறை மூலமாக அவைகள் கணக்கு எடுக்கப்படுகிறது.

அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அளிக்கப்பட்ட அரசு புறம்போக்கு நிலம்.

*வினா எண். 24—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அரசு புறம்போக்கு நிலம் அளிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில் வழங்கப்பட்ட அரசு நிலம் எவ்வளவு?

(இ) இதற்கு அரசு வசூலித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) 18.99 ஏக்கர்.

(இ) ரூ.10,962.69.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நிறுவனங்களுக்கு தமிழக அரசு இலவசமாக நிலங்களைக் கொடுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் இலாக்காவிற்கு சில இடங்களில் இலவசமாகவும், சில இடங்களில் பாதி பணமும், சில இடங்களில் கிரயமும் வாங்கி, நிலைமைகளுக்கு ஏற்றவாறு அரசு நிலங்களைக் கொடுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண்கள் 25, 26 மற்றும் 27 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

Memorandum from the Bar Association, Nagappattinam

*Q. No. 28—Thiru R. UMANATH: Will the Hon. th Minister for Co- operation and Law be pl ased to state—

(a) whether the Government have received a memorandum; dated 16-3-1981 from the Bar Association of Nagapattinam;

(b) if so, the details thereof and

(c) the action taken thereon?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) கிழக்கு தஞ்சாவூருக்கான நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் அமைந்துள்ள கட்டிடம் நெடுநாளைக்கு முன்னதாகக் கட்டப்பட்டதென்றும் அது தற்போது இடிந்து விழும் நிலையில் உள்ளதென்றும் நாகப்பட்டினம் வழக்கறிஞர்கள் குழு முறையிட்டுள்ளது. அக்கட்டிடத்தில் வழக்கறிஞர்களுக்கென அறையேதுமில்லையென்றும் குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதிகள் ஏதுமில்லை என்றும் சொல்லியுள்ளனர். எனவே, மேலே சொன்ன நீதிமன்றம் அமைந்துள்ள கட்டிடத்தை மாற்றியமைக்க வேண்டும். இக்கட்டிடத்தில் குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதிகள் செய்துதர வேண்டுமென நாகப்பட்டினம் வழக்கறிஞர்கள் குழு வேண்டியுள்ளது.

(இ) இது சம்பந்தமாக தலைமைப் பொறியாளர் பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) அவர்களை கலந்தாலோசித்து வரை படங்களையும் மதிப்பீடுகளையும் அனுப்புமாறு உயர்நீதி மன்றத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது. நாகப்பட்டினத்திலுள்ள கிழக்கு தஞ்சாவூருக்கான மாவட்ட நீதிமன்ற கட்டிடத்திற்கு பழுது பார்க்க மற்றும் வசதிகள் செய்துதர ரூ. 1,22,300 அளவிற்கு மதிப்பீட்டை உயர்நீதி மன்றம் அனுப்பியுள்ளது. இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது, விரைவில் பரிந்துரையின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நீதிமன்றங்களில் இப்படிப்பட்ட அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலைமை இருப்பது பலவிடங்களில் உள்ளது என்பதை அரசு அறியுமா? தற்போது உயர்நீதிமன்றம் அளித்துள்ள பரிந் துறையின் அடிப்படையில் விரைவில் நடவடிக்கைகளை மேற் கொள்ள அரசு முன்வருமா?